විශ්‍රාම වැටුප් දෙපාර්තමේන්තුව
ஓய்வூதியத் திணைக்களம்
DEPARTMENT OF PENSIONS

මාලිගාවත්ත කාර්යාලය, මාලිගාවත්ත, කොළඹ 10. மாளிகாவத்தை செயலகம், மாளிகாவத்தை, கொழும்பு 10. Maligawatte Secretariat, Maligawatte, Colombo 10.

අංකය / இல. / No. ஓஊ/சுற்றறி/ 2009 දිනය / திகதி / Date 12.06.2009

**ஓய்வூதிய சுற்றறிக்கை 12/ 2009**

சகல அமைச்சு செயலாளர்கள்,

மாகாண சபை பிரதம செயலாளர்கள்,

திணைக்களத்து தலைவர்கள்,

முப்படை தலைவர்கள்,

மாவட்ட செயலாளர்கள் / பிரதேச செயலாளர்கள்

**கடமையில் ஈடுபட்டிருக்கையில் திடீர் விபத்துகளுக்கு உள்ளாவதால் வலது குறைந்த நிலைக்கு ஆளாகும் அரச அலுவலர்களின் ஓய்வூதியத்தை திருத்தஞ் செய்தல்**

29.12.2008 ஆந் திகதிய பொது நிருவாக சுற்றறிக்கை 22/ 93(iv), 08.10.1986 ஆந் திகதிய பொது நிருவாக சுற்றறிக்கை 386, 01.10.1993 ஆந் திகதிய பொது நிருவாக சுற்றறிக்கை 22/93 மற்றும் 12.07.1988 ஆந் திகதிய பொது நிருவாக சுற்றறிக்கை 21/88 ஆகியவற்றின் ஏற்பாடுகளுக்கிணங்க ஓய்வூதியத்தை திருத்தஞ் செய்தல் சம்பந்தமாக கீழ் குறிப்பிட்டுள்ள அறிவுறுத்தல்களை வெளியிடுகிறேன்.

01. கடமையிலீடுபட்டிருக்கையில் பயங்கரவாத செயல்கள் காரணமாக வலது குறைந்த நிலைக்கு ஆளாகும் அரச அலுவலர்களுக்கு 55 வயது வரை சம்பளம் வழங்கப்படுமாயின் ஓய்வூதியம் திருத்தஞ் செய்யப்படும்.

    i. 55 வயது வரை வழங்கப்பட்ட சம்பளத்திலிருந்து விதவைகள் அனாதைகள் ஓய்வூதிய பங்களிப்புப் பணம் அறவிடப்படல் வேண்டும்.

    ii. 55 வயது பூர்த்தியாகும் தினத்திற்கு உரித்தான சம்பளத்தின் அடிப்டையில் ஓய்வூதிய விண்ணப்பம் / திருத்திய ஓய்வூதிய விண்ணப்பம் முன்வைக்கப்படல் வேண்டும்.

    iii. 55 வயது பூர்த்தியாகும் திகதி வரை சேவைக்காலம் கணிப்பிடப்படல் வேண்டும்.

    iv. பணிக்கொடை கொடுப்பனவின்றி 55 வயதில் மேற்குறிப்பிட்ட சம்பளம் மற்றும் சேவைக்காலத்தின் அடிப்படையில் ஓய்வூதியம் தயாரிக்கப்பட்டு வழங்கப்படல் வேண்டும்.

    v. மருத்துவ காரணங்களினால் ஓய்வு பெறச் செய்து ஓய்வூதியம் வழங்கப்படுமாயின் 55 வயதில் உரித்தாகும் சம்பளம் மற்றும் சேவைக்காலத்தின் அடிப்படையில் அவ்ஓய்வூதியம் (பணிக்கொடையின்றி) திருத்தஞ் செய்யப்படல் வேண்டும்.

02. கடமையிலீடுபட்டிருக்கையில் திடீர் விபத்துகளுக்கு உள்ளாவதால் முழுமையாக வலது குறைந்த நிலைக்கு ஆளாகும் அரச அலுவலர்களுக்கு 55 வயது வரை சம்பளம் வழங்கப்படுமாயின் ஓய்வூதியம் திருத்தம் செய்யப்படும்.(பொது நிருவாக சுற்றறிக்கை 22/93 (iv) இன் கீழ் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன)

i. அச்சம்பளத்திலிருந்து விதவைகள் அனாதைகள் ஓய்வூதிய பங்களிப்புப் பணம் அறவிடப்படல் வேண்டும்.

ii. 55 வயதில் அலுவலர் பெறும் சம்பளம் மற்றும் 55 வயதிலான சேவைக்காலம் என்பவற்றின் அடிப்படையில் ஓய்வூதியம் தயாரிக்கப்படல் வேண்டும். (பணிக்கொடை கொடுப்பனவின்றி ஓய்வூதியம் வழங்கப்படல் வேண்டும்)

iii. மருத்துவ காரணங்களினால் ஓய்வு பெறச் செய்து ஓய்வூதியம் வழங்கப்படுமாயின், 55 வயதில் உரித்தாகும் சம்பளம் மற்றும் சேவைக்காலத்தின் அடிப்படையிலானதாக ஓய்வூதியம் (பணிக்கொடை கொடுப்பனவின்றி) திருத்தஞ் செய்யப்படல் வேண்டும்.

iv. பொது நிருவாக சுற்றறிக்கை 346 மற்றும் 22/93இன் கீழ் விசேட இழப்பீடு மற்றும் இழப்பீட்டு ஓய்வூதியம் வழங்கப்பட்டிருப்பின் அக்கொடுப்பனவுகள் மீள அறவிடப்படல் வேண்டும். இவ் அறவீடு செலுத்தப்பட வேண்டிய நிலுவை சம்பளத்திலிருந்து அறவிடப்படல் வேண்டும். வழங்கப்பட்ட விசேட இழப்பீடு மற்றும் இழப்பீட்டு ஓய்வூதியம் பற்றி ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகத்திடமிருந்து கேட்டு அறிந்த கொள்ளல் வேண்டும்.

03. கடமையிலீடுபட்டிருக்கையில் திடீர் விபத்துக்கு உள்ளாகும் போது, முழுமையான வலது குறைந்த நிலையை விட குறைந்தளவிலான வலது குறைந்த நிலைக்கு ஆளாகும் அலுவலர்களுக்கு 55 வயது வரை சம்பளம் வழங்கப்படுவது உரித்தல்லாததாகையால் ஓய்வூதியத் திருத்தம் ஏற்புடையதாகாது.

04. இச் சுற்றறிக்கை ஏற்பாடுகள் ஆயுத படை உறுப்பினர்களுக்கு ஏற்புடையதாகாது என்பதுடன் அவர்கள் தொடர்பில் ஓய்வூதியச் சுற்றறிக்கை 3/2009 இன் ஏற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும்.

கே.ஏ.திலகரத்ன,
ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகம்,

பிரதிகள் :- 1. செயலாளர் - பொது நிருவாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு

2. கணக்காய்வாளர் நாயகம்